ஸ்ரீ:

சுபக்ருத் ஸ்ரீ ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2022

மலர்: 5
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்






MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com





சூடிக்கொடுத்த
நாச்சியார்
ஆடி - பூரம்
ஆகஸ்ட் 1
(திங்கள்)



ஸ்ரீ ஆளவந்தார்
ஆடி - உத்தராடம்
ஆகஸ்ட் 10 (புதன்)

சுபக்ருத் ௵ ஆடி ௴
ஜுலை - ஆகஸ்ட் 2022

ஸ்ரீ:

மலர்: 5
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand, Thillai Ranganathan & M. Srivenkatanathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

சென்ற ஸஞ்சிகையில் மயிலை வேங்கடவனின் ப்ரஹ்மோத்ஸவ அநுபவத் திவலைகள் கண்டு களித்தோம். அதைத் தொடர்ந்து வரும் க்ரீஷ்ம கால உத்ஸவ வைபவங்கள் சோடைபோகுமா என்ன! இவ்வருட ஆனி மாத விழாக்களையும், ஆடி மாத நிகழ்ச்சிகளையும் பற்றிய காட்சிகளும்/ செய்திகளும், இந்த ஸஞ்சிகையில் நம் கண்ணினுள்ளன ஒக்கின்றனவாக நிற்கப்போவது நிச்சயம்.

**ஆனி விழாக்கள்:** ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வழிபாட்டுக்குரிய ஆசார்யராக அபிமானிக்கப்படும் இராமாநுஜமுநியால் நெஞ்சால் வாரிப் பருகப்படும் சீலம்கொள் **நாதமுநிகளை** அவதரிப்பித்துப் புனிதமடைந்த மாதம் இதுவாம். அன்னாரின் வார்ஷிகோத்ஸவம், உத்ஸவநெறி பிறழாமல் திருமஞ்ஜனம், புறப்பாடு, ஸேவாகாலசாற்றுமுறையோடு அநுஷ்டிக்கப்பட்டது.

இறைவனின் எண்படைக்கு அதிபதி என்றும்; ஈரெண்புயங்களில் ஆயுதங்கள் ஏந்தி சேமங்கள் செய்வதற்காக நிற்பவர் என்றும் துதிக்கப்படும் திரிஸுதர்சநரின் ஜயந்தி உத்ஸவம், இம்மாத சித்திரைத் தாரையில் கொண்டாடப்பட்டது. சேமங்கள் செய்பவர் எம்பெருமான் அல்லவோ? என ஐயம் கொள்ளவேண்டாம். அந்த எம்பெருமான் உலகுக்கு நன்மைசெய்ய நினைத்தமாத்திரத்தில், ஸுதர்சநர் அதை செவ்வனே செய்து முடித்து நிற்பார். இந்த விலக்ஷணமான go-go game-ஐத் தான் ‘ஆழி தொட்டானை‘ என ஆழ்வார் அநுஸந்தித்தார் போலும். நித்யஸூரியான இவர் எம்பெருமானின் அம்சம் என்ற தனிச்சிறப்பு பெற்றவராவார். எண்ணற்ற நித்ய ஸூரிகளுக்குள், ஸ்ரீவேதாந்தவாசிரியரால் தனித்து தோத்திரம் செய்யப்பட்டோர், பெரியதிருவடியும் இவரும் மட்டுமே. அன்னாரின் ஜயந்தி மஹோத்ஸவத்துக்குப் பூர்வாங்கமாக, ஸந்நிதி வளாகத்தில் ஆகம விற்பன்னர்களைக்கொண்டு, வேத கோஷம் முழங்க ‘வன்பெரு வானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ’’ வல்லதொரு மஹாயஜ்ஞமும் அநுஷ்டிக்கப்பட்டது.

மணிவண்ணனின் வடிவார்சோதி வலத்துறையும் சுடராழிக்குத் தனித்து பல்லாண்டு பாடிய கல்பஸூத்ர வ்யாக்யாதாவான விஷ்ணுசித்தரின் வார்ஷிக திருநக்ஷத்ரமும் (ஆனி கருடன் என்ற சிறுபேர் கொண்டது) கொண்டாடப்பட்டது.

மேலும் இந்த ருதுவில் நடத்தப்படும் ஸப்ததின கோடை உத்ஸவமும், ஆகமப்படி சிறப்புற நடத்தப்பட்டது.

இவ்விழாக்களின் நிழற்படங்கள் வாசகர்களின் கண்ணுக்கு விருந்தாம்.

**ஆடி விழாக்கள்:** வேதமனைத்துக்கும் வித்தான சரணாகதி உபாயத்தை உலகுக்கு நடத்திக் காட்டிய சூடிக்கொடுத்த நாச்சியாரின் திருவவதாரதினமான திருவாடிப்பூர விழா, எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் ஆளவந்தாரின் திருநக்ஷத்ரம், மற்றும் கஜேந்த்ரனுக்கு முத்தி அளிக்க எம்பெருமான் புள்ளூர்ந்த விழாவாம் ஆடி கருடன் திருவிழா – ஆகியவற்றை இப்போது முதலே எண்ணி இன்புறுவீர். எம்பெருமானின் அருளைப் பெற்று மகிழ்வீர்.

ஸ்ரீ:

# The Quintessential Divine Maintenance Ritual

FROM THE DESK OF TRUSTEES

The advent of Aadi marks the end of the six-month Utharayana period and the beginning of Dhakshinayana. Jyeshtabhishekam, a significant and divine annual event, is generally observed in temples in the month of either Aani or Aadi. In our Devasthanam, it is performed on Aadi-Hastham, which falls on August 3 this year. On this day, a special Thirumanjanam, with holy water filled in 81 pots (Kalasams), will be performed amidst divine chanting of the Upanishads.

Jyeshtabhishekam is a ritual done in order to preserving the valuable processional deities, that is, Lord Srinivasa with His Consorts and Alarmelmanga Thayar here. It is the only time of a year when Utsavamurthis are present in their original form without the ornamental armour (Kavacham).

As part of the process, the gold armour affixed to the Thirumeni of the Utsava idols of the Lord, Sridevi, Bhudevi and Thayar, are removed before the cleansing and purifying procedures are undertaken as prescribed in the Agama Saasthras. This is done to protect the holy forms of the deities (Vigrahams) from corrosion resulting from regular Thrirumanjanam, as well as the natural wear and tear, and preserve them for eternity. The Kavachams are restored after the completion of the ritual. Importantly, no Thirumanjanam is performed nor the deities taken in processions for the next 45 days or so, in order to allow time to derive the full benefits of the procedure, except for a couple of important annual festivals like Aadi-Garudan, Sri Jayanthi, etc.

The other Utsavams celebrated during Aadi are Thiru Aadi-Pooram, the Thirunakshatram of the peerless Andal, and that of the illustrious preceptor Sri Alavandhaar, besides the Aadi-Garudan to mark Gajendra Moksham.

As is the custom in our temple, Thiru Aadi-Pooram will be celebrated over 11 days – 10 days culminating in the Thiru-Kalyana Utsavam and the Oorkola Utsavam on the following day.

As for the last month, Sri Sudharsana Maha Yajnyam was performed at the temple in a grand manner for the benefit of the society at large. Archaka swamis from many prominent Divyadesams, led by Sri U.Ve. Azhisur Srinivasacharyar, performed the Homam. Hundreds of devotees sat through the day, soaked in the divine experience and received the blessings of Sri Sudharsana. Kodai Utsavam, Sudharsana Jayanthi, Sri Periyazhwar Satrumurai and Sriman Nathamunigal Satrumurai were also performed with customary verve and devotion.



ஸ்ரீ:

# சுபக்ருத் வருட ஆடி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை / ஆகஸ்ட் | ஆடி | | | | | |
| 17/07/2022 | 1 | சதுர்த்தி | ஞாயிறு | சதயம் | தக்ஷிணாயன புண்யகாலம் – பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. பொழுதுடன் திருவாராதனம் | ஸ்ரீ ராமஸ்வாமி & ஸ்ரீ S. பார்த்தஸாரதி |
| 18/07/2022 | 2 | பஞ்சமி | திங்கள் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 19/07/2022 | 3 | ஷஷ்டி | செவ்வாய் | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 20/07/2022 | 4 | ஸப்தமி | புதன் | ரேவதி | திருமால்வடை | |
| 21/07/2022 | 5 | அஷ்டமி | வியாழன் | அச்வினி | திருமால்வடை | |
| 22/07/2022 | 6 | நவமி | வெள்ளி | பரணி | பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் சின்ன கருட வாஹனம் உள் புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ ராகவன் – C/o. ஸ்ரீ K. ரவி |
| 23/07/2022 | 7 | தசமி | சனி | க்ருத்திகை | திருவாடிப்பூரம் உத்ஸவம் – 1ம் நாள் – காலை ஆண்டாள் திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ L.V. நரஸிம்மன் குடும்பத்தார் |
| 24/07/2022 | 8 | ஏகாதசி | ஞாயிறு | ரோஹிணி | காலை பெருமாள், ஆண்டாள் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு. திருவாடிப்பூரம் 2ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் குடும்பத்தார். ஏகாதசி: N.கஸ்துரிரங்கன் |
| 25/07/2022 | 9 | த்வாதசி | திங்கள் | ம்ருகசீர்ஷம் | திருவாடிப்பூரம் 3ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. சேஷாத்ரி குடும்பத்தார் |
| 26/07/2022 | 10 | த்ரயோதசி | செவ்வாய் | திருவாதிரை | திருவாடிப்பூரம் 4ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன் |
| 27/07/2022 | 11 | சதுர்தசி | புதன் | புனர்வஸு | திருவாடிப்பூரம் 5ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ C.R. ராகவன் |
| 28/07/2022 | 12 | அமாவாசை | வியாழன் | புனர்வஸு / புஷ்யம் | பெருமாள் உத்ஸவர், ஆண்டாள் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. திருவாடிப்பூரம் 6ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்சனம். மாலை ஆண்டாள் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | அமாவாசை: ஸ்ரீ கோவிந்தன். திருவாடிப்பூரம்: ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 29/07/2022 | 13 | ப்ரதமை | வெள்ளி | புஷ்யம் / ஆயில்யம் | தாயார், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம். திருவாடிப்பூரம் 7ம் நாள். மாலை தாயார் யானை வாஹனம் உள்புரப்பாடு. ஆண்டாள் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30/07/2022 | 14 | த்விதீயை | சனி | ஆயில்யம் | திருவாடிப்பூரம் 8ம் நாள். ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ வேங்கட நரஸிம்மன் குடும்பத்தினர் |
| 31/07/2022 | 15 | த்ருதீயை | ஞாயிறு | மகம் | திருவாடிப்பூரம் 9ம் நாள். ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை ஆண்டாள் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திட்டை ஸ்ரீ ராஜகோபால் முரளி |
| 01/08/2022 | 16 | சதுர்த்தி | திங்கள் | பூரம் | திருவாடிப்பூரம் – ஆண்டாள் உத்ஸவம் 10ம் நாள் – பெருமாள், ஆண்டாள் திருமஞ்சனம். மாலை பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு. இரவு திருக்கல்யாணம், ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை, சேர்த்தி | ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி |
| 02/08/2022 | 17 | பஞ்சமி | செவ்வாய் | உத்தரம் | ஊர்கோல உத்ஸவம் – காலை பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு. மாலை பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு. கருட பஞ்சமி – கருடன் திருமஞ்சனம் | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |
| 03/08/2022 | 18 | ஷஷ்டி | புதன் | ஹஸ்தம் | ஜ்யேஷ்டாபிஷேகம் – 81 கலச திருமஞ்சனம் | ஸ்ரீ கோபாலஸ்வாமி ஐயங்கார் பண்ட் |
| 04/08/2022 | 19 | ஸப்தமி | வியாழன் | சித்திரை | ஸ்ரீ மதுரகவியாழ்வார் | |
| 05/08/2022 | 20 | அஷ்டமி | வெள்ளி | ஸ்வாதி | தாயார் ஆஸ்தானம் | |
| 06/08/2022 | 21 | நவமி | சனி | விசாகம் | ஸ்ரீ நம்மாழ்வார் | |
| 07/08/2022 | 22 | தசமி | ஞாயிறு | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 08/08/2022 | 23 | ஏகாதசி | திங்கள் | கேட்டை | பெருமாள் | |
| 09/08/2022 | 24 | த்வாதசி | செவ்வாய் | மூலம் | திருமால்வடை | |
| 10/08/2022 | 25 | த்ரயோதசி | புதன் | பூராடம் / உத்தராடம் | ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்ரம். மாலை பெருமாள், ஆளவந்தார் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பத்ரிநாராயணன் |
| 11/08/2022 | 26 | சதுர்தசி | வியாழன் | உத்தராடம் / திருவோணம் | கஜேந்த்ர மோக்ஷம் – ஸ்வாமி தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள் கருட வாஹனம், தேசிகன் தங்கக் கேடயம் வீதிபுறப்பாடு. மாலை பொழுதுடன் திரு வாராதனம், ஸேவாகாலம், சாற்றுமுறை | கஜேந்த்ர மோக்ஷம்: MKR குடும்பத்தார். ச்ரவணம்: ஸ்ரீ N. சேஷாத்ரி |
| 12/08/2022 | 27 | பௌர்ணமி | வெள்ளி | அவிட்டம் | மாலை தாயார் தங்கக் கேடயம் உள் புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ T.R. ஸ்ரீநிவாஸன் – C/o. ஸ்ரீதர் |
| 13/08/2022 | 28 | த்விதீயை | சனி | சதயம் | ஸ்ரீ பேயாழ்வார் | |
| 14/08/2022 | 29 | த்ருதீயை | ஞாயிறு | பூரட்டாதி | திருமால்வடை | |
| 15/08/2022 | 30 | சதுர்த்தி | திங்கள் | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 16/08/2022 | 31 | பஞ்சமி | செவ்வாய் | ரேவதி | திருமால்வடை | |

ஸ்ரீ:

# பரமனைப் பள்ளியுணர்த்தும் பரம பாகவதர்கள்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

**ஸுப்ரபாதம்**

முந்திய நள்ளிரவில் பர்யங்காஸனத்தில் துயில் கொண்ட எம்பெருமானை மறுநாள் கனவிருள் அகலாத இளங்காலைப் பொழுதில் விழிப்புற்று துயில் நீங்கி நம்மை அனுக்ரஹிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கும் ஸ்துதியே ஸுப்ரபாதம்.

எம்பெருமானுக்கு உறக்கம் உண்டா? க: **ஸ்ரீ: ஸ்ரீய: பரம ஸத்த்வ ஸமாச்ரய: க: க: புண்டரீக நயந: புருஷோத்தம: க:** என்று ஆளவந்தார் அருளிச் செய்தபடி பகவான் மிகவும் உயர்ந்ததான ஸத்வ குணத்திற்கு இருப்பிடமானவன். அவன் உறங்குவான் போல் யோகு செய்பவன் என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி லோக ரக்ஷணத்தின் பொருட்டு எப்பொழுதும் விழித்திருக்கின்றான். இவ்விதமிருக்க அவனை ஏன் பள்ளி உணர்த்த வேண்டும் எனில் அது நமக்காகத்தான்! அநாதி காலமாக பகவத் சிந்தனையின்றி உறங்கிக் கொண்டிருக்கும் நம்மை உய்விப்பதற்காக அவன் துயிலெழ வேண்டும் என்பதாக. **உத்திஷ்ட்ட புருஷ ஹரீலோஹிதபிங்களாக்ஷி** (தைத்திரீய நாராயணவல்லீ) (செந்தாமரை போல் சிவந்தகண்ணனே! புருஷனே! ஹரியே! எழுந்தருளாய்) என்று பரம புருஷனுக்கு அஸாதாரணமான இரண்டு திருநாமங்களையும் புண்டரீகாக்ஷத்வமாகிற அடையாளத்தையுமிட்டு அழைத்து வேதபுருஷன் அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியதாக ஆன்றோர் கூறுவர்.

**ஸ்ரீ ராமனுக்கு ஒரு ஸுப்ரபாதம்:**

முதன் முதலில் எம்பெருமானுக்கு ஸுப்ரபாதம் சொல்லியவர் **விச்வாமித்ர** மஹரிஷி. ஸ்ரீமத் ராமாயணத்தில் விச்வாமித்ரர்யாக ஸம்ரக்ஷணத்திற்காக இராம லக்ஷ்மணர்களை அழைத்துச் செல்லும்பொழுது ஸாக்ஷாத் பரமாத்மாவாக இருக்கச் செய்தேயும், **ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்** என்கிறபடி ஒரு ஸாதாரண மனிதனைப்போல் கங்கைக்கரையில் உறங்கிக் கொண்டிருக்கும் சக்ரவர்த்தித் திருமகனுக்கு ஸுப்ரபாதம் சொல்கிறார் விச்வாமித்ரர். காலை அனுஷ்டானங்கள் செய்வதற்காக எழுப்புகிறார், 'கௌஸல்யையின் ஆனந்தத்தை வளர்க்கும் அழகனே! கிழக்கு வெளுத்து விட்டது! பள்ளியெழுந்தருள்வாயாக!' என்று பாடுகிறார்! உடையவன் உறங்கினால் உலகமெல்லாம் உறங்கிவிடாதோ? **கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே** என்பது வால்மீகி இராமாயண ச்லோகம்.

**திருவேங்கடமுடையானுக்கு ஒரு ஸுப்ரபாதம்:**

கலியுக ப்ரத்யக்ஷ தெய்வமான திருவேங்கட முடையானுக்கு அனுதினமும் அனுஸந்திக்கப்டும் ஸுப்ரபாதம் ஸுப்ரஸித்தம்! மேற்கூறிய இராமாயண ச்லோகத்யே முதல் ச்லோகமாக அமைத்து திருவேங்கடவனுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார் **ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன்** ஸ்வாமி.

**ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு ஒரு ஸுப்ரபாதம்**

**அரவணையாய் ஆயரேறே! அம்மமுண்ணத் துயிலெழாயே...** என்று யசோதை பாவனையில் கண்ணனுக்கு ஸுப்ரபாதம் அருளிச் செய்தார் **விஷ்ணுசித்தர்.** பிற ஆழ்வார்கள் எம்பெருமானின் அவதார ரஹஸ்யங்களிலும், கல்யாண குணங்களிலும் ஆழங்கால் பட்டு நிற்க, பெரியாழ்வாரோ பொங்கும் பரிவினால் யசோதா பிராட்டியின் பாவனையில் கண்ணனை அனுபவிக்கின்றார் தம் பைந்தமிழ்ப் பாசுரங்களாலே!

**அரங்கனுக்கு ஒரு ஸுப்ரபாதம்**

நம் ஸம்ப்ரதாயத்தில் திருப்பள்ளியெழுச்சிக்கென்றே ஏற்பட்டது ஒரு திவ்ய ப்ரபந்தம்! திருவரங்கத்தில் திருநந்தவனம் அமைத்து பசுந்துளவ தொழில் மாலையினை ஸமர்ப்பித்து உள்ளங்குளிர்ந்து அரவணையில் கண்துயிலும் அவனைத் திருக்கண் மலர்வதற்காகத் திருப்பள்ளியெழுச்சி பாடியவர் **தொண்டரடிபொடி ஆழ்வார்!** ஸம்ஸாரமாகிற பெருந் தூக்கத்திலிருந்து ஆழ்வாரை எழுப்பிய பெரிய பெருமாள் மற்றவர்களையும் இவரைப்போலவே தம்மிடம் ஈடுபடச் செய்வது எவ்விதம் என்று சிந்தித்துக் கொண்டு யோக நித்திரை செய்பவனை **அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே** என்று தம்முடைய ப்ராப்யத்வரையாலே பாசுரந்தோறும் திருப்பள்ளியுணர்த்தினார் ஆழ்வார்!

**அனைவருக்குமாக ஒரு அழகிய ஸுப்ரபாதம்**

ஆம்! இது ஓர் பாவை பாடிய திருப்பள்ளியெழுச்சி! **எம்பாவாய்** என அழைத்து பெருமானுடன் சேர்த்து அவனடியார்களையும் பள்ளியுணர்த்திய பெருமைக்குரியவள் நம் பாவையான ஸ்ரீஆண்டாள்! **ஸாக்ஷாத் க்ஷமாம்** என்று ஸ்வாமி தேசிகன் அருளிச்



செய்தபடி **ஆறும் பேறும் இதுவே** என, ஸித்தாந்தத்தை உலகோருக்கு எடுத்தியம்ப பூமிப்பிராட்டியின் அம்சமாக அவதாரம் செய்தவள். எம்பெருமானின் பெருமைகளை மிக எளிமையாக விளக்கி, ஜீவாத்மாக்கள் ஸம்ஸார துக்கத்திலிருந்து மீண்டு உய்வடைந்து பகவத் கைங்கர்யமாகிற உயர்ந்த புருஷார்த்தத்தைப் பெறும் **மார்கத்தை திருப்பாவை, நாச்சியார் திருமொழி** என்னும் ஒளிரும் இரு ப்ரபந்த ரத்னங்கள் மூலம் காட்டித் தந்தவள்! எம்பெருமானை அடையும் பொருட்டு பாவை நோன்பில் படிந்து அவனைப் பலவாறாக அனுபவித்துப் பேசுகின்றாள்.

எம்பெருமானை **ஸர்வ ரஸ:** என்று உபநிஷத்துகள் உத்கோஷிக்கின்றன. ஸதா பச்யந்தி ஸூரய: என்றபடி நித்யஸூரிகளும் கூட பலரும் சூழ இந்த அம்ருதத்தைப் பருகலாம்படியிருக்க இடக்கை வலக்கை அறியா ஆயர்குலப் பெண்ணொருத்தி அவனைத் தனியாக அனுபவிப்பது கூடுமோ? மேலும் **ஏக ஸ்வாது ந புஞ்ஜீத** என்கிறபடி இவ்வாராவமுதைத் தனியாக அனுபவிக்காமல் மற்றுமுள்ள ஜீவாத்மாக்களும் அனுபவிக்க வேண்டும் என்னும் திருவுள்ளம் கொண்டு திருப்பாவையில் **புள்ளும் சிலம்பின** என்கிற பாசுரம் தொடங்கி ஆண்டாள் தோழிமார்களை எழுப்பிக் கொண்டு கண்ணனிடம் வருகிறாள்.

ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் ஜீவன்களை கரையேற்றுவதற்காகப் பத்து அவதாரங்களைச் செய்தான் எம்பெருமான். ஆண்டாள், பகவத் விஷயத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் ஜீவாத்மாக்களிடம் கருணையுள்ளம் கொண்டு, பத்து பாசுரங்களின் மூலம் எம்பெருமானின் மேன்மையையும், எளிமையையும், அவனுடைய திவ்ய சரித்ரங்களையும் சொல்லி அத்யத்புதமாக **பாகவதர்களுக்கு திருப்பள்ளியெழுச்சி** ஸாதிக்கின்றாள். உயர்ந்த தத்வங்களையும் போதிக்கின்றாள்!

கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட அளவில்லாச் சிற்றின்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதே சேதனனுக்கு தூக்க நிலையாகும்!

*நித்ராயிதான் நிகம வர்த்மனி சாருதர்சீ*
*ப்ரஸ்த்தாந சக்தி ரஹிதாந் ப்ரதிபோத்ய ஜந்தூந்|*
*ஜீர்ண ஸ்தநந்ய ஜடாந்த முகாநிவாஸ்மாந்*
*நேதும் முகுந்த! யதஸே தயயா ஸஹ த்வம்||*
*[சரணாகதி தீபிகை -15]*

வைதிக மார்கத்தில் உணர்வின்றி உறங்குமவர்களாய் முதியவர், குழந்தை, மூடர், குருடர் போன்று ஞானமும், சக்தியும் அற்ற நம்மைத் தட்டி எழுப்பி நல் வழியில் நடக்கச் செய்ய பெருமாள் முயற்சி செய்கின்றார் என்று ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ளார். **ஜீர்ண** ஸ்தநந்ய **ஜட அந்த** என்ற பதங்கள் திருப்பாவையில் எழுப்பப்பட்ட தோழிகள் ஒவ்வொருவரையும் குறித்தும் குறிப்பால் உணர்த்துகின்றன என்று ஆன்றோர் கூறுவர்.

ஆண்டாள், பாவை நீராட்டத்திற்காக தோழிகளை எழுப்பும் விதமாக பழுதே பல காலமும் கழித்துக் கொண்டிருக்கும் நம்மைத்தான் எழுப்புகிறாள்! நல்லறிவையும் பகவத் அனுபவத்தையும் அனைவருக்கும் வாரி வர்ஷிக்கின்றாள். **பிள்ளாய்** (பகவத் அனுபவத்தில் முதிர்ச்சி இல்லாதவள்) **எழுந்திராய்! கேட்டில்லையோ பேய்ப் பெண்ணே! நாயகப் பெண் பிள்ளாய்! கோதுகலமுடைய பாவாய்!** என்று பலவாறு விளித்து **சென்று நாம் ஸேவித்தால், மாமீர் அவளை எழுப்பீரோ, ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ!** என்றெல்லாம் உரிமையோடு உறவும் கொண்டாடிக் கொண்டு **மாற்றமும் தாராரோ, ஆற்ற அனந்தலுடைய அருங்கலமே** (ஸத் பாத்திரம்), **பொற்கொடியே போதராய், எற்றுக்கு உறங்கும் பொருள்** (க்ருஷ்ணனுக்கு



மிகவும் பிரியமானவளே!) ஈதென்ன பேருறக்கம் (மற்றவர்களுக்கு இல்லாத சிறப்பை உடையவளே), **பள்ளிக்கிடத்தியோ பாவாய்** (க்ருஷ்ணனை தனியாக அனுபவிப்பவள்), **வாய் பேசும் நங்காய், இளங்கிளியே** என்றெல்லாம் அவர்களைப் பலவாறாக , சில ஸமயம் போற்றியும் சில ஸமயம் இகழ்ந்தும் அழைப்பதன் தாத்பர்யத்தைப் புரிந்துக் கொண்டு நாமும் ஆண்டாள் காட்டிய பாதையைப் பின் பற்றி நல்வாழ்ச்சி பெறலாம் என்று பூர்வாசார்யர்கள் உபதேசிக்கின்றனர்.

இவ்விதம் ஆண்டாள் அனைவரையும் அழைத்துக் கொண்டு நந்தகோபரின் திருமாளிகைக்கு வந்து கோயில் காப்போன், வாயில் காப்போன் என இருவரிடமும் எம்பெருமானை துயில் எழுப்புவதற்காக வந்திருக்கும் தங்களுக்கு அனுமதி அளிக்குமாறு ப்ரார்த்திக்கின்றாள். அவர்களின் அனுமதி பெற்று **எம்பெருமான் நந்தகோபலா எழுந்திராய்** என்று **நந்தகோபரையும்,** கோபர்களுக்கெல்லாம் குல விளக்காய் இருப்பவளே என்று **யசோதை பிராட்டியையும், உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்** என்று **கண்ணனையும், க்ஷீரம் சர்க்கரயேவ** என்பதாக க்ருஷ்ணனுக்கு ப்ரியனான **பலராமனையும்** எழுப்புகிறாள்.

மற்றவர் எழுந்துவிட, கண்ணன் மட்டும் எழுந்து வரவில்லை என்பதால் ஆண்டாள் புருஷகாரம் செய்யக் கூடிய பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு தான் பெருமாளை அடைய வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு, **உந்து, குத்து, முப்பத்து** என்னும் மூன்று பாசுரங்களால் நப்பின்னைப் பிராட்டியை எழுப்புகிறாள். முதலில் நப்பின்னைப் பிராட்டியின் குணங்களையும் பெருமைகளையும் கூறி அவளை எழுப்புகின்றாள். அடுத்து ஒரு பாசுரத்தில், மோக்ஷ தசையில் எம்பெருமானையும் பிராட்டியையும் சேர்ந்தே அனுபவிக்கப் போவதால் இருவரையும் சேர்த்தே எழுப்புகிறாள். அடுத்து நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்! என்று நப்பின்னையை குணபூர்த்தி உள்ளவளே என்றும், ‘திருவே’ பெரிய பிராட்டியாரை ஒத்தவளே என்றும் அத்புதமாக வர்ணித்து பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தியை பண்ணித் துயில் எழுப்பிய விதம் மிகவும் அழகானது!

ஆகாரத்ரய ஸம்பந்நாம் என்றபடி அவளுடைய உபாய, உபேய, புருஷகாரமாகிய மூன்று நிலைகளையும் எடுத்துச்சொல்லி, திருவே துயிலெழாய் என்று எழுப்பியபின், **உத்போத்ய க்ருஷ்ணம்** என்று அடுத்து முறையாக க்ருஷ்ணனை எழுப்புகிறாள். நப்பின்னைப் பிராட்டியுடன் சேர்ந்து, கோவிந்தனின் குணங்களைப் பாடி, துயிலெழாய் என்று அவனுக்கு திருப்பள்ளியெழுச்சி ஸாதித்திருப்பது ஆண்டாளின் ஏற்றம்! இவ்விதம் அவனை திருப்பள்ளியுணர்த்தி வேதாந்தங்களின் தேறிய பொருளாகிய ஜீவத்மாக்களைக் காக்கும் அதீனத்தை உடைய அவனுடைய தன்மையையும் அவனுக்கு அறிவுறுத்துகிறாள்! நமக்கு நல்லறிவினை போதித்து பெருமாளிடம் அழைத்துச் சென்று அவனை நம்மைக் காக்கும்படி நியமித்து அருள் பாலிக்கும் இவளின் கருணை தான் என்னே! தாயல்லவோ!

இவ்வண்ணம் பலவிதமானவர்களுக்கும் மற்றும் க்ரமம் மாறாமலும் இப்பாவை பாடிய திருப்பள்ளியெழுச்சியானது மிகவும் உன்னதமானதும் விலக்ஷணமானதும் கூட என்று கூறினால் மிகையாகுமோ? வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து என்கிறபடி பெரியாழ்வார் திருமகளாரான **கோதையின் மலர்ப் பதங்களின்** அடிச்சுவட்டினை நாமும் பின்பற்றி அத்தேவாதி தேவனை சென்று ஸேவித்தால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவோம் என்பது வெள்ளிடைமலையே!






## கோடை உத்ஸவம்






கோடை உத்ஸவம்









## கோடை உத்ஸவம்









ஸ்ரீ:







## கோடை உத்ஸவம்









# கோடை உத்ஸவம்





ஸ்ரீ:








கோடை உத்ஸவம்



ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம்







ஆனி கருடன் ★ பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்



ஸ்ரீ:



ஆனி - ச்ரவணம்







எகாதசி ★ வெள்ளிக்கிழமை

ஸ்ரீ:

# ஆண்டாள் அருள்பேசும் அந்தாதிமாலை

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு



**1**

**தி**ருப்பாவை
நற்செல்வம்
மீட்கும் அருட்பா
**வி**ருப்போடு
ஓதியுணர்
தேர்ந்து!

**2**

**தே**ர்ந்திடும்
முப்பதும்
வாழ்வினை
மாலின்தாள்
**சே**ர்ப்பது
திண்ணம் அறி!

**3**

**அ**றிந்தார்
அனைத்துமே
ஆறைந் ததனால்
**நெ**றிமைகொள்
வாழ்வில் சிறந்து

**4**

**சி**றந்ததோர்
சேமம் தனக்கெனக்
கண்டு
**பி**றக்கதைக்
காட்டுநற் கோதை!

**5**

**கோ**தை
தமிழனைத்தும்
வாழ்வை
வகைப்படுத்தும்
**வே**தாந்த
சாரமெனக் காண்!

**6**

**க**ண்டு விருந்தா
வனக்கண்ண
னுக்கென்றும்
**தொ**ண்டே
அடைவிக்கும்
பாடு!

**7**

**பா**க்களொடும்
பூக்களொடும்
பூசித்துக்
கண்ணனொடு
**நீ**க்கமறச்
சேர்ந்தாளைச்
சொல்லு!

**8**

**சொ**ல்லெடுத்து
நாரணனைக்
காண்பித்த
தந்தைவழி
**எ**ல்லோர்க்கும்
ஈந்தாள் தமிழ்!

**9**

**த**மிழால்
மறைமுடியின்
இன்பொருளே
ஈந்தாள்
**வி**ழிமூடா
வாழ்வேகாண்
இன்று!

**10**

**இ**ன்புற்று
நாரணனின்
பாதம்சேர் கோதையே
**அ**ன்போடு பக்கத்
திரு!

ஸ்ரீ:

# கரியான் கழல் ஏந்தும் கருடாழ்வான்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

**பதக முதலை வாய்ப்பட்ட களிறு கதறிக் கைகூப்பி என் கண்ணா! கண்ணா! என்ன உதவப் புள் ஊர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த அதகன்** என்று கஜேந்த்ர மோக்ஷ ப்ரகரணத்தில் கருடாழ்வாரை முன்னிட்டு பொன்னாழிக்கை அம்மானைக் காண்பித்தருள்கிறார் பெரியாழ்வார். எம்பெருமானின் ஸ்வாஸமாகும் வேதத்தின் ஸ்வரூபமாவதனால் ஸ்ரீகருடனுக்கு இந்த ஏற்றம். இதனாலேயே வேதம் வாஹனமாக, அதாவது கருடாரூடனாக (கருட சேவை) எம்பிரானை ஸேவிப்பது விசேஷம். கோவிந்தனின் திருவடியை அடைய வேண்டி, ஞானியரும் யோகியரும் தவமாய்த் தவமிருக்க, ஸ்ரீகருடன் தாமரை மலரொத்த எம்பெருமானின் திருவடி ஸ்பர்சம் அனுக்ரஹிக்கப் பெறுகிறான்.

வேதம் தமிழ் செய்த ஆழ்வார்களின் திருவாக்கினில் பரிமளிக்கும் கருடாரூடனின் பேரழகினை அவர்களது அருளிச்செயல்களில் அனுபவிப்போம்.

**வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பு**

நாச்சியார் திருமொழியில் பதினான்காம் தசகத்தின் பத்து பாசுரங்களில் ஒன்றாகும் கீழ்க்கண்ட அருளிச்செயலில் ஸௌபர்ணனின் ஏற்றம் பாடுகிறாள் கேசவனின் காதலி.

*மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை*
*ஏலாப் பொய்களுரைப்பானை இங்கே போதக் கண்டீரே*
*மேலால் பரந்த வெயில்காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும்*
*மேலாப்பின்கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே.*
*[நாச்சியார் திருமொழி 14-3]*

'இது ஸாத்யம் தானா என்று காண்போர் வியக்கும் வண்ணம் நடக்கவே முடியாத விஷயங்களை செய்பவன்' என்று தனது மனங்கவர்ந்தானைப் பற்றி முதல் இரண்டு வரிகளில் கூறுகிறாள் கோதை நாச்சியார். **ஏலாப் பொய்களுரைப்பானை** – குறும்புக்காரனைப் பார்த்தீரா என்று முதல் இரண்டு வரிகளில் கேட்கும் பாவை, மூன்றாம் மற்றும் நான்காம் வரிகளில் **மேலால் பரந்த வெயில்காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின்கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே** என்று ரஸனையுடன் ஸேவிக்கிறாள். வினதை புத்ரனாம் கருடனின் சிறகுகளென்னும் மேலாப்பின் கீழ் வெய்யில்படாமல் காக்கப்படுபவன் எம்பெருமான் என்று தன் யஜமானனது வாஹனத்தினைக் கொண்டாடுகிறாள்.

இப்படி கருட வாஹனனாக விருந்தாவனத்தே கோதை கண்ட மாதவனுக்கு அஹிதம் ஏதும் நேராது காவல் புரியுமாறு கருட அம்சமாகும் அவளது திருத்தகப்பனாராம் பெரியாழ்வார் ஸாதிப்பது அழகுக்கு அழகூட்டும்.

**பறவை அரையா உறகல்**

கருடாரூடனாய் எம்பெருமானை ஸேவிப்பதென்பது பெரியாழ்வாரின் அபிலாஷை. இதனாலேயே, பாண்டியன் ஸபையில் பரதத்வ நிர்ணயம் செய்து கஜத்தின் மீதேறி வந்த தனது மாமனாருக்கு கருடாரூடனாய் ஸேவை ஸாதித்தான் கோதை மணாளன்.

எம்பெருமானால் காக்கப்பட்டவர் என்று அவனடி அநுஸந்தித்திருந்த ஸ்ரீவிஷ்ணுசித்தர், கருடாரூடனாகத் தனக்கு ஸேவை ஸாதித்த அந்தப் ப்ரந்தாமனை உறங்காதிருந்து காவல் காக்குமாறு அவனது திவ்யாயுதங்களுக்கும், அஷ்டதிக்பாலகர்களுக்கும், வாஹனத்திற்கும் உத்தரவிடுகிறார்.

*உறகல் உறகல் உறகல் ஒண்சுடராழியே! சங்கே!*
*அறவெறி நாந்தகவாளே! அழகிய சார்ங்கமே! தண்டே!*
*இறவுபடாமல் இருந்த எண்மர் உலோகபாலீர்காள்!*
*பறவை அரையா! உறகல் பள்ளியறை குறிக்கொண்மின்!*
*[பெரியாழ்வார் திருமொழி 5-2-9]*

**இறவுபடாமல் இருந்த** என்பது ம்ருத்யு இல்லாத என்ற அர்த்தம் கொள்ள, அனைத்திற்கும் அதிபதியான அந்த க்ஷீராப்திநாதனை விழித்திருந்து காக்கச் சொல்லும் ஆழ்வாரின் வாத்ஸல்யத்திற்கு ஈடு இணை கிடையாது.

**உறகல் உறகல் உறகல்** என்று நித்திரைக் கொள்ளாது கடல்வண்ணனைக் காவல் காக்கச் சொன்ன ஆழ்வார், **பறவை ஏறு பரம புருடா நீ என்னைக் கைக்கொண்டபின் பிறவி என்னும் கடலும் வற்றிப் பெரும்பதம் ஆகின்றது** என்று அனுஸந்தித்து, மோக்ஷம் அனுக்ரஹிப்பவனின் ஸர்வ சக்தித்வத்தினைக் கொண்டாடுகிறார்.

ப்ரபஞ்ச ரக்ஷகனை காப்பாற்றுபவனாகவும் காப்பாற்றப்பட வேண்டியவனாகவும் இருவேறு பரிணாமங்களில் ஆழ்வார் காட்டும் அத்புதமான பதங்கள் இவை. இதனாலேயே, ஸ்ரீவைஷ்ணவத் திருக்கோயில்களில் 'அர்ச்சனை யார் பேரில் பண்ண வேண்டும்?' என்று கேட்கப்படும் போது, பெரியாழ்வார் பாவத்தினைக் கொண்டு, 'பெருமாள் பேரிலேயே ஆகட்டும்' என்று கூறுவது வழக்கம். ப்ரபஞ்சகாரகனும் ரக்ஷகனுமாகும் மாதவனின்

ஹிதத்தினை மட்டுமே கருத்தினில் கொண்ட நம் பூர்வர்களின் உயர்நிலை பக்தியினைக் காட்டும் த்ருஷ்டாந்தங்கள் இவை.

**புள் ஊர்ந்து தோன்றிய சுடர்ச்சோதி**

*மழுங்காத வைந்நுதிய சக்கரநல் வலத்தையாய்த்*
*தொழுங்காதல் களிறு அளிப்பான் புள் ஊர்ந்து தோன்றினையே!*
*மழுங்காத ஞானமே படையாக மலர் உலகில்*
*தொழும்பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே?*
*[திருவாய்மொழி 3-1-9]*

நம்மாழ்வார் ஸேவித்த இந்தத் திருவாய்மொழிப் பாசுரத்தில் **மழுங்காத வைந்நுதிய சக்கரநல் வலத்தையாய்** என்பது சக்கரத்தாழ்வானின் புகழ் பாட, **மழுங்காத ஞானமே படை** எனும் பதங்கள் ஸங்கல்ப மாத்ரமே அனைத்தையும் செய்யக் கூடியவனது ப்ரபாவத்தினைப் பேசுகிறது. **மலர்உலகில் தொழும்பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே** —உயர்வற உயர்நலம் உடையவன் அவன் என்ற தனது வாக்கினை அடிக்கோடிடும் விதமாக ஆழ்வார் ஸேவிக்கும் பதங்கள் இவை.

உயர் ஞானத்தின் அதிபதியாகும் எம்பெருமான் தன் திருவடி தொழுவோர்க்கு ஹிதங்கள் அனைத்தையும் கடாக்ஷித்துக் கொண்டே இருந்தாலும், அவனது கீர்த்தியானது குறையாது. இப்படி நிறைவான சக்தியினை உடையவன் யாரென்றால், **தொழுங்காதல் களிறு அளிப்பான்** – ஆதிமூலத்தினைத் தொழ வேண்டுமென்ற சோராத காதல் கொண்ட கஜேந்த்ரனுக்கு அனுக்ரஹிக்கவென, **புள் ஊர்ந்து தோன்றினையே** —கருடன் மீது வந்தவனே என்று அடையாளம் காட்டுகிறார்.

**தெய்வமெங்கும் நாட்டி நின்ற கருடவாஹனன்**

*நாட்டினான் தெய்வ மெங்கும் நல்லதோரருள் தன்னாலே*
*காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்குய்யும் வண்ணம்*
*கேட்டிரே நம்பிமீர்காள்! கெருட வாகனனும் நிற்க*
*சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே.*
*[திருமாலை -10]*

‘திருவரங்கமே உய்யும் வழி எனும் ஸத்யத்தினை தன்னடி பணிந்தோர் உணரச்செய்யும் எம்பிரான், **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என்ற தனது திருவாக்கினை நம்பாத தாமஸரும் ராஜஸரும் ஆச்ரயிக்கவென இதர தேவதைகளை ஸ்ருஷ்டித்தான். நீர்வண்ணன் அல்லாத வேறு ஒருவரை அடிபணிபவர் பிராட்டியின் கடாக்ஷம் கிட்டாது, மூதேவியின் மடி சேர்பவராவர். ஶ்ரீகருடனை வாஹனமாகக் கொண்டவன் ஒருவனே ஆச்ரயிக்கத் தக்கவன்,’ என்கிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார். **கெருடவாகனனும்** என்று உரைத்து, வினதை புத்ரனை வாஹனமாகக் கொண்டவன் என்று ஶ்ரீகருடனை முன்னிட்டு அவனது யஜமானனை அடையாளம் காட்டுகிறார்.



**தெய்வப் புள்ளேறி வருவான்**

திருநாங்கூர் கருட ஸேவை உலக ப்ரஸித்தி பெற்றது. தை அமாவாசைக்கு அடுத்த நாள், திருமங்கை ஆழ்வார் ஹம்ஸ வாஹனத்தில் முன் செல்ல, பதினோரு கருட வாஹனங்களில் எம்பெருமான்கள் அவரைப் பின்தொடரும் அற்புதமான உத்ஸவம் இது.

நாச்சியார் கோயில் என்று ப்ரபலமாக அறியப்படும் திருநறையூரில் எழுந்தருளியுள்ள நம்பி என்ற திருநாமம் கொண்ட எம்பெருமான், திருமங்கை ஆழ்வாருக்கு ஆசார்ய ஸ்தானம். இங்கு ஸந்நிதி கொண்டுள்ள ஆஜானுபாஹுவான கல் கருடனின் மீதேறி, நம்பி உத்ஸவம் கண்டருள்கிறார். இதனைத் திருமங்கைமன்னன் ஸேவிக்கும் அழகிய பாசுரம் இதோ:

*தூவாய புள்ளூர்ந்து வந்து துறைவேழம்*
*மூவாமை நல்கி முதலை துணித்தானை*
*தேவாதி தேவனைச் செங்கமலக் கண்ணானை*
*நாவாயுளானை நறையூரில் கண்டேனே.*
*[பெரிய திருமொழி 6-8-3]*

திருக்குடந்தையில் கோயில் கொண்டிருக்கும் ஆராவமுதனைப் பற்றி திருமங்கை மன்னன் ஸேவிக்கும் திருவெழுகூற்றிருக்கை பாசுரத் தொகுப்பு ரதபந்தமாக அமைந்துள்ளது.

*…ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை*
*நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை ஏறி*
*நால் வாய் மும்மதத்து இருசெவி ஒரு தனி வேழத்தரந்தையை*
*ஒரு நாள் இருநீர் மடுவில் தீர்த்தனை…*

ஆதிமூலமே என்ற கஜேந்த்ரனின் கூக்குரலைச் செவிமடுத்து எம்பெருமான் எழுந்தருளும் முன் அஞ்சிறைப் பறவையான ஸ்ரீகருடன் கிளம்பிய வேகமானது, நான்கு திசைகளும் நடுங்கும் வண்ணம் இருந்தது என்று ஸ்ரீகருடனின் ப்ரபாவத்தைப் பாடுகிறார் ஆழ்வார். இப்படி நால் திசை நடுங்க அஞ்சிறைப் பறவையாம் ஸ்ரீகருடன் கிளம்பியது, ஆதிமூலமானவன் கஜேந்த்ரனை ரக்ஷிக்கக் கிளம்பி விட்டான் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்தவே என்று ரஸமாக ஸேவிப்பர் நம் பூர்வர்.

*எய்யச் சிதைந்தது இலங்கை மலங்க வருமழை காப்பான்*
*உய்யப் பருவரை தாங்கி ஆநிரை காத்தான் என்றேத்தி*
*வையத்தெவரும் வணங்க அணங்கெழு மாமலை போலே*
*தெய்வப்புள்ளேறி வருவான் சித்திர கூடத்துள்ளானே.*
*[பெரிய திருமொழி 3-3-6]*

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் திருச்சி த்ரகூடப்பிரானின் கருட ஸேவையினை விளக்கும் இந்தப் பாசுரத்தில், **தெய்வப்புள்ளேறி வருவான் சித்திர கூடத்துள்ளானே** என்று ஸேவித்து ஸ்ரீகருடனின் ஏற்றத்தினைக் கூறுகிறார்.

**ஸ்ரீகருடனுடன் அரங்கனை ஸேவிக்க ஆசை**

ஸ்ரீரங்கநாயகி மணாளன் சோலைகள் சூழ் திருவரங்கத்தில் பஞ்சாயுதங்களுடன் ஆதிசேஷன் மீது சயன திருக்கோலத்தில் தனக்கு ஸேவை ஸாதிக்க வேண்டும் என்று கூறுகையில், குலசேகர ஆழ்வார் கருடனைப் பற்றி பாடும் பதங்கள் **கால் ஆர்ந்த கதிக் கருடன் என்னும் வென்றிக் கடும்பறவை. கால் ஆர்ந்த கடும் கதி** என்பது ஸ்ரீகருடனின் வேக கதியினைக் கொண்டாட, **கருடன் என்னும் வென்றிக் கடும்பறவை –** ஜயத்தினை மட்டுமே தனது வழக்கமாகக் கொண்ட பக்ஷிராஜன் என்று அவனது கீர்த்தியினைப் பாடுகிறது. இப்படிப்பட்ட ப்ரபாவம் கொண்டவனை ஸ்ரீரங்கநாதன் ஸஹிதம் ஸேவிக்க வேண்டுமென்று அபிலாஷை கொள்கிறார் குலசேகர ஆழ்வார் .

கருட ஸேவை என்பது வேதங்கள் போற்றும் பரம்பொருளை அந்த வேதத்துடனான ஸேர்த்தியில் ஸேவிப்பதாகும். ஸ்ரீவைஷ்ணவத் திருக்கோயில் உத்ஸவங்களில் கருட வாஹனத்தில் பிராட்டி மணாளன் எழுந்தருளும் காலத்தே, ஸ்ரீகருடனின் திருநேத்ரங்களில் மிரட்டும் த்வனி இருக்கும். ‘தள்ளிப்போ! என் பெருமானிடம் நெருங்காதே’ என்ற ஜாக்ரதை உணர்வு ஸேவையாகும். உத்ஸவ காலங்களில் மற்ற வாஹனங்களின் மீது ஆரோஹணித்து அந்தப் பரம்பொருளானவன் ஸேவை ஸாதிக்கும் போது, எம்பெருமானின் ஸ்வாஸமான வேதத்தின் ரூபமாக ஸ்ரீகருடன் அவனுடனே இருக்கிறான்.

ஸர்வத்தையும் ஸ்ருஷ்டித்து, ரக்ஷித்து, ஸம்ஹரிக்கும் எம்பெருமான் உள்ளிழுக்கும் ஸ்வாஸமாக வேதமும், வெளிவிடும் ஸ்வாஸமாக திவ்ய ப்ரபந்தமும் (தமிழ் வேதம்) உள்ளதனால் தான், ஸ்ரீவைஷ்ணவ உத்ஸவங்களில் எம்பெருமானின் முன்னும் பின்னுமாக அருளிச்செயல்களையும் வேதங்களையும் கோஷ்டியாக ஸேவிப்பது வழக்கம். அனைத்திற்கும் அதிபதியானவனின் ஸ்வாஸமாகும் வேதத்தினையும் ப்ரபந்தத்தினையும் ஸேவிக்கும் திருக்கோஷ்டியினர் ஏற்றம் மிகுந்தவர் என்பதனால் தான், திருவீதிப் புறப்பாடுகளில் அவர்களை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும் வழக்கம் உள்ளது. அப்படி ஸேவிப்பது பல நூறு கோடி ஜன்மங்களின் துஷ்கர்மாக்களைப் போக்க வல்லது.

பரம்பொருளானவனையும் அவனது வாஹனமாகும் பக்ஷிராஜனையும் ஒரே பீடத்தில் ஸேவித்து, வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ் வருவானின் திருவடியை அடைந்து உய்வோம்!.

**ஆடியில் முக்கிய உத்ஸவங்கள்**

**திருவாடிப்பூர உத்ஸவம் (11 நாட்கள்)**
ஜூலை 23 (சனி) முதல்
ஆகஸ்ட் 2 (செவ்வாய்) வரை

**ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவம்**
ஆகஸ்ட் 1 (திங்கள்)

**ஊர்கோல உத்ஸவம்**
ஆகஸ்ட் 2 (செவ்வாய்)

**ஜ்யேஷ்டாபிஷேகம்**
ஆகஸ்ட் 3 (புதன்)

**ஆளவந்தார் திருநக்ஷத்ரம்**
ஆகஸ்ட் 10 (புதன்)

**கஜேந்த்ர மோக்ஷம் - ஆடி கருடன்**
ஆகஸ்ட் 11 (வியாழன்)

**Sponsorships and donations towards publication expenses are welcome**

# An Overview Of Thooppul Pillai's Tamil Prabandhams (3)

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

**7. Adaikkala-Paththu**

Adaikkala-Paththu is a significant Prabandham of 11 Paasurams in which Swami Desika gives a personal account of taking refuge at the feet of Lord Varadaraja of Aththigiri (Kancheepuram). All critical aspects as regards Prapaththi are clearly brought out in this marquee Prabandham. This may be considered as the Tamil equivalent of the author's hymn Nyasa Dasakam, addressing the same Lord.

In the first two Paasurams, two vital eligibility criteria for Prapaththi are laid down — 'Aakinchanyam', that is 'helplessness' and 'Ananya-gathithvam', which means 'not seeking other gods'.

In the opening verse, Swami Desika draws an analogy from the Kakasura episode from Srimath Ramayanam to highlight the state of being helpless and says that similarly he took refuge at Varada's feet. Here, he mentions that Kanchi is important among the seven holy cities that grant Moksham — the others being Ayodhya, Mathura, Maya (Haridwaar), Kaasi, Avanthi (Ujjain) and Dwaaraka.

In the second verse, the author brings to the fore the fact that gods like Siva and Brahma are subject to the effect of Karma and prone to destruction. He adds, being aware of that, he sought refuge in Lord Varada who is ever compassionate and never separated from His Consort.

The third Paasuram categorically says that the Lord of Aththigiri grants all that is sought of Him to those who conform to the rules of the Varna and Asrama and approaches Him duly following the sayings in the Vedas and other works of the preceptors of our Sampradaya.

That Prapaththi is capable of bestowing all benefits is brought out in the next Paasuram. The Lord granted worldly pleasure and Moksham, as the case may be, to Kakasura, Vibhishana, Draupadhi, Kshthrabandhu, Kaalinga, Siva, Brahma and Devas.

The defining feature of Prapaththi is its five-fold pre-requisite, and Swami Desika observes the same in the fifth Paasuram. These are:

- **Aanukoolya Sankalpam:** Commitment to do always only what will be pleasing to the Lord, as laid down in the Saasthras;
- **Praathikoolya Varjanam:** Commitment to desist from doing what will be displeasing to Him;
- **Aakinchanyam:** Clear consciousness of one's destituteness or inability as regards anything and that he cannot, by his own effort, attain salvation;



- **Mahaa Viswaasam:** Absolute and unwavering faith in one's redeemability through Him and that He alone can grant Moksha;
- **Gopthruthva Varanam:** Uttering one's decision to take His safe refuge for salvation.

Athma Samarpanam, which is transferring the burden of the soul by entrusting the responsibilities with the Lord (நல் அடைக்கலமாய் அடைந்தேனே), wraps up the above five.

In the sixth Paasuram, the Acharya places himself before Lord Varada who is the saviour of those who performed Saranaagathi through one of the four methods — Swanishta (self-surrender), Ukthi Nishta (performing Prapathi by uttering the words of one's Acharya), Acharya Nishta (included in the Prapathi done by one's Acharya), Bhagavatha Nishta (included in the Prapathi done by a fully competent Bhagavatha).

Another crucial point is explained in the next verse. That is, Prapaththi ought to



be done only once for a particular purpose, lest, it will tantamount to betrayal of Maha Viswaasam (full faith). Swami Desika says that, he attained the feet of Perarulaalan who, with His Abhaya Mudhra, appears to tell that It is enough to perform Prapathi just once.

How a Prapanna should conduct himself after Prapaththi is mentioned in the eighth Paasuram. Sri Desika avers that he wouldn't forget the Lord's words such as the Charama-Sloka, so that, Maha Viswaasam doesn't diminish; knowledge, devotion and happiness increase; humility stays intact, etc.

In the ninth verse, the author says, he worshipped the feet of the Lord after getting rid of ignorance and obtaining clarity through the great works of the Azhwars and Acharyas that are the essence of the Vedas and Saasthras.

Exclusive Athma Samarpanam is observed in the penultimate Paasuram by Swami Desika, as he says that he drowned into the feet of the kind Varada who is always with His Consort, has an exquisite form, ever merciful, epitome of knowledge, easy to access, omni-present, the Lord of the universe, performer of creation-protection-destruction.

The author concludes the Prabandham noting that Bhagavathas are those who held Lord Arulaala as the means as well as the end. The Prapathi has to be done only once while the fruits are permanent.

This Prabandham is similar to 'Pallandu' in Divya Prabandham in that it is also always recited first up whenever Desika Prabandham is begun in temples and at home. Hence, it is imperative to learn and by-heart it. Recitation, with the benefit of the knowledge of the meaning, will make it doubly delightful.

**8. Artha Panchakam**

The next Prabandham is Artha Panchakam. This is the third one of the six Prabandhams dedicated to Lord Varadaraja.

Those who are desirous of deliverance (Moksham) ought to know five things: 1. The form and attributes of the Supreme Being (Paramaathma); 2. The form and attributes of the individual soul (Jivaathma); 3. The nature of deterrents to Moksham; 4. The nature of the means (Bhakthi and Prapaththi); and 5. The nature of Moksham.

The above points have been aptly dealt with in the Prabandham in two Paasurams each. It may be observed that each Paasuram mentions Piraatti, showing that it is always the inseparable Divya Dhampathis — whether it is Upaayam or Upeyam.

The Piraatti references are (Paasuram-wise):

1. கமலையுடன் அரசாளும்
2. திருவுடனே வள்ளல் அருளாளர்
3. தீதலின்றித் திகழும் ... திருமாலே
4. கமலையுடன் கண்டுகந்து
5. மெய்யருள் செய்திடும் திருமால்
6. சிதைவில் அருள் தரும் திருமால்
7. அம்புயத்தாள் ஆரமுதே
8. பங்கயத்தாள் அகலகிலேன் என்று உறையும்
9. உருநலம் கொண்டு உறும் திருவோடு
10. தம் திருமாதுடனே தாம்

**9. Vaishnava Dinachari**

Five-Session Routines of a Day (Pancha-Kaala Prakriya) as prescribed in the Saasthras for Srivaishnavas have been enumerated in this Prabandham — in two Paasurams each. The religious chores have to be performed in five distinctive sessions. They are:

1. **Abhigamanam:** The prayer to the Lord to the effect that the routines for the day are performed without obstructions.
2. **Upaadhaanam:** Gathering flowers, Thulasi, fruits, etc. for Bhagavath Aradhanam, the daily worship; Engaging in the Kalakshepam of the great scriptures like Ithihasas, Puranas, works of the Azhwars and Acharyas.
3. **Ijyai:** Performing Thiruvaradhanam to the Lord as prescribed in the Saasthras.
4. **Swaadhyaayam:** Chanting and familiarising of the Vedas.
5. **Yogam:** Meditating upon the feet of the Lord at the time of retiring to bed.

**10. Thiru-chinna Maalai**

This is a unique Prabandham composed by Swami Desika. Captivated by the majesty of the wind instrument 'Thiru-chinnam' blown ahead of Lord Varadaraja's procession during Uthsavams, the author set the Prabandham to a similar gait, recalling the Lord's attributes and deeds each line before ending with the word 'Vandhaar' (வந்தார்). Hence, the name is 'Thiru-chinna Maalai'.

Swami Desika has revealed the essence of Thirumanthram in the first six Paasurams, Dhvayan in the seventh verse and Charama-Slokam in the eighth and ninth Paasurams. The 10th one is a general salutation to the Lord and the final Paasuram avers that only those who desire the great goal of Moksham could experience the sweetness of this Prabandham.

Since all the three esoteric tenets of Srivaishnavam have been covered in this, it is held that the three Rahasyams (Thirumanthram, Dhvayam and Charama-Slokam) are dedicated to Lord Varadaraja.

Legend says that, in reverence to this Prabandham which was born after Swami Desika triumphed in his efforts to restore recitation of Divya Prabandham during processions, the Lord presented one of the two Thiru-chinnams to Swami Desika, and hence only one is being used even now.

*(To be continued...)*


**ஆஸ்திகர்கள் கவனத்திற்கு**

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' தை மாதம் முதல் இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்:
044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:



*With Pranams:*

**R. Parthasarathy & Family,**

Nanganallur, Chennai - 600 061.

Mobile: 87544 48450

**SVDD thanks Sri R. Parthasarathy & Family**

for sponsoring this month's issue of Desika Sandesam



ஸ்ரீ ஸுதர்சன மஹா யஜ்ஞம்









ஸ்ரீ ஸுதர்சன மஹா யஜ்ஞம்

